சாதி, பிரிவு அல்லது உட்பிரிவு வேறுபாடின்றி இந்து சமயத்தைச் சேர்ந்த தகுதியுள்ளவர்களிடமிருந்து அர்ச்சகர்கள், பூசாரிகள் அல்லது ஏனைய உள்துறை ஊழியர்கள் இந்து சமய நிறுவனங்களில் நியமிக்கப்படுதல்

சமூகச் சீர்திருத்த நடவடிக்கையாக, சாதி, பிரிவு அல்லது உட்பிரிவு வேறுபாடின்றி இந்து சமயத்தைச் சேர்ந்த தகுதியுள்ளவர்களிடையேயிருந்து அர்ச்சகர்கள், பூசாரிகள் அல்லது ஏனைய உள்துறை ஊழியர்கள் இந்து சமய நிறுவனங்களில் நியமிக்கப்பட வேண்டுமென்று இந்த அவை கருதுவதாலும் ;

மேற்சொன்ன நோக்கத்துக்காக இம்மாநிலச் சட்ட மன்றம் சட்டமியற்ற இயலும் வகையில் அரசியலமைப்பு தக்கவாறு திருத்தப்பட வேண்டுமென்பதாலும் ;

சட்ட வரைவில் குறிப்பிட்டுள்ளபடி அரசியலமைப்பைத் தக்கவாறு திருத்துவதற்குத் தேவையான சட்டமொன்றை இயற்றுமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொள்வதென இம்மன்றம் தீர்மானிக்கிறது ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

4. மேலவை விதி 82-ன் படி அறிக்கை

உணவு தானியங்களின் விலை உயர்வு, பதுக்கல், கடத்தல் ஆகியவற்றைத் தடுக்க அரசின் நடவடிக்கைகள் குறித்து.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மத்திய அரசின் நிதிக் கொள்கை, பண வீக்கம் ஆகியவைகளால் பொதுவாக நாட்டில் உணவு தானியங்களின் விலை ஏறியிருப்பதோடு அண்மையில் மத்திய அரசு நடைமுறைக்குக் கொண்டு வந்த உணவுக் கொள்கை, உர விநியோக முறை ஆகியவைகளால் தமிழகத்திலும் உணவு தானியங்களின் விலை ஏறி அரிசி விலை உயரத் தொடங்கி யிருக்கிறது.

தமிழக அளவில் இந்த விலை உயர்வைத் தடுத்து நிறுத்தவும், பதுக்கல், கடத்தல் ஆகிய சமூக விரோதச் செயலில் ஈடுபடுவோர்மீது தக்க நடவடிக்கை எடுக்கவும் அரசு எடுத்துள்ள கீழ்க்கண்ட முடிவுகளை அறிவிக்கிறேன்.

உடனடியாக, தஞ்சை மாவட்டம் தவிர மற்ற எல்லா இடங்களிலும் லெவி 15 சதவிகிதமாகக் குறைக்கப்படும். தஞ்சை மாவட்டத்தில் லெவி 40 சதவிகிதமாகவே தொடர்ந்து இருக்கும். தஞ்சை மாவட்டம் மற்றும் எல்லையோரப் பகுதிகளான விளவன்கோடு வட்டம், கல்குளத்தில் 10 கிராமங்கள் ; கன்னியாகுமரி மாவட்டத்தின் இதர பகுதிகள் ; திருநெல்வேலி மாவட்டத்தி

லுள்ள அம்பாசமுத்திரம் மற்றும் செங்கோட்டை தென்காசி வட்டங்கள், மதுரை மாவட்டத்திலுள்ள உத்தமபாளையம் வட்டம், பெரிய குளம் கொடைக் கானல் வட்டங்கள் ; கோவை மாவட்டத்திலுள்ள பொள்ளாச்சி வட்டம்; கோவை அவிநாசி வட்டங்கள்; உடுமலைப்பேட்டை பல்லடம் ஆகிய வட்டங்கள்; நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் வட்டம் மற்றும் உதகை மாவட்டத்தில் மசினகுடி கிராமம் ஆகிய பகுதிகள் தவிர மாநிலம் முழுவதும் நெல், அரிசி போக்குவரத்துக் கட்டுப்பாடு உடனடியாக நீக்கப்படுகிறது.

எல்லையோரப் பகுதிகளில் கண்காணிப்பைத் தீவிரப் படுத்தவும், உணவுப் பொருள் கடத்தலைத் தடுக்கவும், உணவுப் புலனாய்வுத் துறை மற்றும் அந்தந்த வட்டங்களில் உள்ள காவல் துறையினர், ஊர்க்காவல் படையினர், சீரணிப் படையினர், இளைஞர் அணி ஆகியோர் பணியை அரசு உடனடியாகப் பயன் படுத்திக்கொள்ளும்.

கடத்தலையும், பதுக்கலையும் கண்டுபிடிக்கும் அரசு ஊழியர்கள், காவல் துறை அலுவலர்கள் உள்பட அனைவருக்கும் பரிசு வழங்கும் திட்டம் ஒன்றை அரசு ஏற்கெனவே அறிவித்துள்ளது. இந்தத் திட்டத்தின்படி கைப்பற்றப் பட்ட அல்லது பறிமுதல் செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பில் 10 சதவிகிதம், கண்டுபிடிப்பவர்களுக்குப் பரிசாக அளிக்கப்பட்டு வந்தது. இனிமேல் எல்லையோரப் பகுதிகளில் கடத்தலையும், பதுக்கலையும் செய்யும் நபர்களைக் கண்டுபிடிக்க அரசுக்குத் தகவல் கொடுத்து உதவி செய்யும் பொது மக்கள், அரசு ஊழியர்கள், ஊர்க்காவல் படையினர், சீரணித் தொண்டர்கள் இளைஞர் அணி ஆகியோருக்குக் கைப்பற்றப்பட்ட உணவுப் பொருளின் விலை மதிப்பில் 25 சதவீதம் வழங்கப்படும்.

அரசின் சார்பில் சமூக நலன் நாடி, சேவை செய்யும் தொண்டர்களுக்கு 'சமூக நலத் தொண்டன்' என்ற பதக்கமும் வழங்கப்படும்.

அரசினால் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை அரைவை செய்து வழங்கும் பொருட்டு தமிழ் நாடு உணவுப் பொருள் வழங்கல் கழகத்திற்கும், மத்திய உணவுக் கழகத்திற்கும் சொந்தமான நவீன அரிசி ஆலைகளுக்கு மின்வெட்டி லிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. தமிழ் நாடு உணவுப் பொருள் வழங்கல் கழகத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட நெல் அரைவை முகவர்களுக்கும் (ஹல்லிங் ஏஜென்ட்ஸ்) அவரவர்களுடைய அரைவைத் திறனை முழுவதும் பயன்படுத்தி அரசுக்குச் சொந்தமான நெல்லை அரைப்பதற்காக இன்று முதல்

மின்வெட்டிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. இதைத் தவிர தனியார் கணக்கில் நெல் கொள்முதல் செய்து அரைவை செய்வதற்கு வசதியளித்து சந்தையில் போதுமான அளவு அரிசி மக்களுக்குக் கிடைக்கும் பொருட்டு மாநிலம் முழுவதிலுமுள்ள எல்லா அரிசி ஆலைகளுக்கும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஆணைகளுக்கு இணங்கி குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட அரைவை கூலிகளுக்கு ஏற்றுக்கொள் வதாக ஒப்புக்கொண்டால், மின்வெட்டு 30 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாகக் குறைக்கப்படுமென்று அறிவிக்கப்படுகிறது.

உணவுப் பொருள்களைப் பதுக்கி வைத்தோ அல்லது தலைச் சுமையாகவோ, வேறு வாகனங்களிலோ, உணவுக் கடத்தலில் ஈடுபடுவோர் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டு கடுமையான நடவடிக்கைகளுக்கு ஆளாவார் கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்களின் மிக அத்தியாவசிமான இந்தப் பிரச்சினையில் தங்கள் சுயநலத் திற்காக சட்டத்தை ஏமாற்றத் துணியும் வியாபாரிகள், கடத்தல்காரர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க இந்த உணவுப் பிரச்சினையில் அரசோடு ஒத்துழைக்க வேண்டுமென்று எல்லாத் தரப்பினரையும் நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, நல்ல சமயத்தில் அறிக்கை வெளியிட்டதை நான் வரவேற்கின்றேன். இதில் எழக்கூடிய சில முக்கியமான சந்தேகங்களை விளக்கும்படியாக முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கின்றேன். போக்குவரத்துத் தடை நீக்கப்பட்டு விட்டதாகச் சொன் ஞர்கள். அதே நேரத்தில் உணவுக் கடத்திலிலே ஈடுபடுபவர்களுக்குக் கடுமை யான தண்டனை கொடுக்கப்படும் என்றும் சொன்னுர்கள். கொஞ்சம் விளக்கத் துடன் இந்த அறிக்கை இருக்குமானுல், நான் வரவேற்றிருப்பேன். இது எல்லைப்புரத்தில் என்று நான் நினைக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: படிக்கும்போதே குறிப்பிட்டிருக்கி றேன். 'எல்லையோரப் பகுதிகளில் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தவும், உணவுப் பொருள் கடத்தலைத் தடுக்கவும்' என்று குறிப்பிட்டிருந்தேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஸ்டேட்மென்ட்பேரில் 'டிஸ்கஷன்' இல்லை

திரு. கே. ராஜாராம் : விளக்கம்தான். சந்தேகத்தைக் கேட்க விதிகளிலே இடமிருக்கிறது. மதுரை போன்ற இடங்களிலிருந்து சென்னைக்கு சாப்பாட்டிற்காக அரிசி கொண்டு வருவதற்கெல்லாம் தடை இருக்காது என்று நான் நினைக்கிறேன். தஞ்சை மாவட்டத்திலிருந்துகூட லெவியைக் கொடுத்து விட்டால், சென்னைக்குக் கொண்டுவர தடை இருக்காது என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, நியாயமான முறையிலே சாப்பாட்டிற்கு என்று அரிசி கொண்டுவரவேண்டும் என்றால், அங்கே நிலமிருக்க வேண்டும். ஆனால் வெளியிலே கொண்டு வருவதற்கு காரணங்கள் இருக்க வேண்டும். மற்றவிடங்களிலே வியாபாரத்திற்காகக் கொண்டுபோனால் 15 சதவீதம் லெவி கொடுக்க வேண்டும். தஞ்சை மாவட்டத்திலிருந்து கொண்டுபோனால், 40 சதவீதம் லெவி கொடுக்க வேண்டும். அப்படி லெவி கொடுத்தவர்கள் கொண்டுவரலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, சாதாரணமாக லெவி முறையை தஞ்சாவூர் மாவட்டத்திலே 40 சதவீதம் என்று ஆக்கியிருக்கிறார்கள். தஞ்சாவூர் மாவட்டத்தில் விற்பதைவிட மற்ற மாவட்டங்களில் ஒரு மூட்டை 25 ரூபாய் முதல் 30 வரையில் அதிகமாக விற்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள். தஞ்சாவூர் மாவட்டத்திலே மறுபடியும் 40 சதவீதம் லெவி என்று கொண்டுவந்தால், தஞ்சை மாவட்டக்காரர்களுக்கு நெல் விலை 25 ரூபாய் முதல் 30 ரூபாய் வரை குறைந்து, கோயம்புத்தூர், சேலம் மாவட்டக்காரர்களுக்கு நெல் விலை அதிகம் விற்கும் என்ற நிலைமை ஏற்படும். ஆகவே தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகளுக்கு மட்டும் அந்த மாதிரி நிலைமை உருவாவதைத் தடை செய்வதற்கு அரசாங்கம் ஏதாவது செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

அதே நேரத்தில் இப்பொழுது எடுத்திருக்கிற நடவடிக்கைகளுக்கு நான் முழுமனதாக ஆதரவு தரக் கடமைப்பட்டிருக்கிறேன் என்றாலும்கூட, பார்டர் ஏரியாக்களிலிருந்து வேறு மாநிலங்களுக்குப் போகாமல் தடைசெய்ய முடியுமென்றால், மாநில அளவில் எல்லாவிடங்களிலேயும் இந்த லெவியை எடுத்துவிட்டால், விலை குறையக்கூடிய நிலை எல்லா இடத்திலேயும் ஏற்படும் என்பதை அரசுக்குச் சொல்லிக்கொண்டு, அந்த விளக்கத்தையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அநேகமாக சிறிய விவசாயிகள் எல்லாம் அவர்களிடம் உள்ள நெல்லைக் கொடுத்துவிட்டார்கள் என்றே இந்த அரசு அறிகிறது,

[1974 ஏப்ரல் 23

பெரிய விவசாயிகள், பெரிய வியாபாரிகள் நிறையத் தேக்கி வைத்திருக்கிறார்கள். ஆகவே 40 சதவீதம் லெவி போட்டால்தான் நாம் அதிலே எவ்வளவு வாங்க முடியுமோ, அவ்வளவை வாங்குவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதற்காகத்தான் 40 சதவீதம் போடப்பட்டிருக்கிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : பிரயாணிகள் சில சமயம் . ..

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருளைப்பற்றி, தலைவரின் இசைவினைப் பெற்று, அமைச்சர் அறிக்கை ஒன்றை வெளியிடலாம்; ஆனால் அவ்வறிக்கையின்மீது அப்போது எவ்வித வினாவும் எழுப்பப்படலாகாது. அவையில் எழுப்பப்படும் எல்லா ஒழுங்குப் பிரச்சினைகள் பற்றியும் தலைவர் முடிவு செய்ய வேண்டும்; அவரது முடிவே இறுதியானதாகும். (குறுக்கீடு). அப்படியா, சரி.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவர் அவர்களே, பிரயாணிகள் சில சமயம் வெளியூர்களுக்குச் செல்லும்போது சாப்பாட்டிற்கு அரிசி எடுத்துக் கொண்டு போகிறார்கள். அதற்கு பர்மிட் இருக்கிறது. பர்மிட் எதுவுமே இல்லாமல் அரை மூட்டை அல்லது கால் மூட்டை என்ற அளவிலே சில ஊர்களுக்கு எடுத்துச் செல்கிறார்கள். அப்படி அனுமதி—பர்மிட்—இல்லாமல் எவ்வளவு அரிசி எடுத்துச்செல்ல ஒரு மனிதனுக்கு அனுமதி இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பிரயாணிகள் பிரயாணிக்காக அரிசி கொண்டுபோனால், அதிலே எந்தத் தடையும் கிடையாது. அதை ஒரு கடத்தல் என்கின்ற அளவிலே தங்களுடைய சாப்பாட்டிற்காக என்று எடுத்துச் செல்வார்களேயானால், அவற்றைத் தடுப்பதற்காக இன்றைக்கு இங்கே குறிப்பிடப்பட்ட காவலர்கள், சீரணியினர், ஊர்க்காவல் படையினர், பொதுமக்கள் அத்தனை பேருக்கும் உரிமை இருக்கிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவர் அவர்களே, சாப்பாட்டிற்காக எவ்வளவு அரிசி எடுத்துக்கொண்டு போக அனுமதிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, அதற்கு அனுமதி தேவையில்லை. ஆனால் சாப்பாட்டிற்கு என்று கடத்தல் செய்து, 4 மூட்டை எடுத்துக்கொண்டு போய் அகப்பட்டிருக்கிறார்கள். சாப்பாட்டிற்கு என்று சில பேர் பாட்டில்களில் போட்டுக்கொண்டு போகிறார்கள். பொம்மைக்குள் வைத்துக்கொண்டு போகிறார்கள். நேற்றைய முன்தினம்கூட

பிடிக்கப்பட்டிருக்கிறது. லாரியின் சைலன்சருக்குக் கீழே வைத்துக்கொண்டு போகிறார்கள். நம்முடைய நண்பர் தஞ்சாவூர் மாவட்டத்து விவசாயிகளைச் கஷ்டப்படுத்துகிறமாதிரி சொன்னார்கள். அப்படி அல்ல. முதலிலே அங்கே 50 சதவீதம் போட்டிருந்தோம். இப்பொழுது 40 சதவீதம் லெவி போட்டிருக்கிறோம். ஆனால் மற்ற மாவட்டங்களுக்கும் போடாமல் இல்லை. மற்ற மாவட்டங்களுக்கு 15 சதவீதம் போட்டிருக்கிறோம். நம்முடைய தஞ்சை மாவட்டத்திலே 5½ லட்சம் ஏக்கர் இருபோக சாகுபடி செய்து அதிகமாக நெல் இருக்கிறது. எனவே 50 சதவீதத்தை 40 சதவீதம் என்று செய்து, 25 சதவீதம் என்று இருந்த லெவியை 15 சதவீதம் என்று செய்திருக்கிறோம். ஆகவே தஞ்சாவூர் மாவட்டத்திலே எனக்கும் முதலமைச்சர் அவர்களுக்கும் அக்கறை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன், இதற்காகத்தான் 40 சதவீதம் தஞ்சை மாவட்டத்தில் லெவி போடுகிறோம். அங்கே சாதாரண விவசாயிகள் எல்லாம் விற்றுவிட்டார்கள். இப்பொழுது வியாபாரம் செய்வதற்கு என்றே ஒரு சிலர் வாங்கி வைத்திருக்கிறார்கள். பெரும் மிராசுதார்கள் இந்தப் பகுதியிலேதான் இருக்கிறார்கள். அதே நேரத்திலே தஞ்சை மாவட்டத்திலே இருக்கிற 100 க்கு 70 பேர் வாங்கித் தின்பவர்கள். அதையும் நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் மறந்து விடக்கூடாது. அவர்களுக்கும் விலையை சேலத்தில் இருப்பதைப்போல் ஏற்றிவிட்டால், இங்கேயும் வாங்கித் தின்கிற மக்களுக்கு சேலத்திலே இருக்கிற அதிகவிலை வந்துவிடும். ஆகவே உற்பத்திசெய்கிற மக்களுக்கு கூடியவரைக்கும் அதை நிறைவேற்றியிருக்கிறோம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, 'பார்டர் ஏரியாஸ்' என்று சொல்லப்படுகிற பகுதிகளில் 'ஸ்பெஷல் ஆர்ம்டு போலீஸ்' என்று நாம் போடுகிறோம் என்கிறார்கள். அதிலே இருக்கின்றவர்களில் 75 சதவிகிதம் பேர் வெளிமாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லப்படுகிறது. அதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள் என்று நினைக்கிறேன். வெளிமாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அந்தப் பக்கங்களிலே இருக்கிற காரணத்தாலே, அரிசிக் கடத்தலைத் தடுக்க வேண்டும் என்று முழு மனதுடன் ஈடுபடவில்லை என்ற கருத்தும் நிலவிவருகிறது. நமது மாநிலத்தைச் சேர்ந்தவர்களே பெரும்பாலும் இருக்கிற நிலையை அரசினர் உருவாக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, எல்லாவற்றிலும் அப்படியே செய்யப்படும்.